சி.சி. 408/2019

2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் நாள், வியாழக்கிழமை அ.சா.12 நபரின் வாக்குமூலம் திரு.கோவிந்தராஜ் , உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டது.

பெயர் - சதீஸ்குமார் வயது - 30

தகப்பனார்/கணவர் பெயர் .காத்தான்

கிராமம் - தொழில் -

தாலுக்கா -

மு.வி.

தற்போது சிறுகமணி கிராமத்தில் வசித்து வருகிறேன். அதற்கு முன்பு மான்பிடி மங்கலம் கிராமத்தில் வசித்து வந்தேன். எலெக்ட்ரிக்கல் வேலை செய்து வருகிறேன். கடந்த 23.01.2013ம் தேதியன்று எனக்கு 03.00 மணியளவில் தொலை பேசி மூலம் எனது உறவினர் ராஜ் எனது அப்பா விபத்தில் இறந்து விட்டதாக தெரிவித்தார். நான் 3.00 மணிக்கு ஜி.எச்.சில் சென்று உள்ளே சென்று பார்த்தேன். எனது அப்பா இரு சக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் போது சிறுகமணி மெயின் ரோட்டில் ஊரடையான் வீட்டிற்கு எதிரே சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டது என்றும் அவரை மருந்துவமனைக்கு கொண்டு செல்லும் போது இறந்துவிட்டதாக கூறினார்,. மேலும் 3 நபர்கள் விபத்தின் போது சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். நான் பிரேத விசாரனையின் போது உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

தரப்பில் குறுக்கு விசாரனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Recorded from the witness,
Taken down on my dictation, read over
to him and accepted by him as correct and
made his signature

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam

சி.சி. 408/2019

2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் நாள், வியாழக்கிழமை அ.சா.13 நபரின் வாக்குமூலம் திரு.கோவிந்தராஜ் , உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டது.

பெயர் - **சக்திவேல்** வயது -

தகப்பனார்/கணவர் பெயர் .**அருணாச்சலம்**

கிராமம் - தொழில் -

தாலுக்கா -

மு.வி.

**நான் திருச்சி திருவளர்ச்சோலையில் வசித்து வருகிறேன் . விவசாயம் செய்து வருகிறேன் . கடந்த 23/01/2013 ம் தேதி நான் திருவளர்ச்சோலையில் வரும்போது மாலை 3.00 மணியளவில் எனது உறவினர்கள் போன் செய்து எனது மகள் துர்க்கா மற்றும் என் அத்தை தேன்மாழி. நல்லதம்பி ஆகியோர் இருசக்கர வாகனத்தில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சிறுகமணி அருகே செல்லும் போது மேற்கிலிருந்து வந்த கார் வலது புறம் ஏறி அவர்கள் மீது ஏறி விபத்து ஏற்பட்டதாக கூறினார். நான் திருச்சி அரசு மருத்துவமனை சென்றேன் . அங்கு எனது மகள் துர்க்காவின் பிரேத விசாரனையன் போது நான் உடனிருந்தேன். காத்தான் என்பவரும் மேற்படி விபத்தில் இறந்துவிடட்தாக கேள்விப்பட்டேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Recorded from the witness,

Taken down on my dictation, read over to him and accepted by him as correct and made his signature

Web copy